# பள்ளிக்கல்வித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2009-2010

## மானியக் கோரிக்கை எண் 43

### கொள்கை

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து
-அய்யன் திருவள்ளுவர்

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது,
ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

-திருக்குறள் கலைஞர் உரை

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் தமிழகம் பள்ளிக் கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

- அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குதல்
- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
- பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் 8ம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
- இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்.
- அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கை அடையும் வகையில் ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் கல்வியை நிறைவு செய்ய உதவுதல்.
- பயிற்சிகளின் மூலம் ஆசிரியர்களிடம் படைப்பாற்றல், பங்கேற்றல், தொழில் நுட்பம் போன்ற திறன்களை வளர்த்து, தரமான தொடக்கக் கல்வி அளித்தல்.
- முழு எழுத்தறிவுத் திட்டத்தை அடைதல்
- ஆசிரியர்களின் கற்பிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையை குறைக்கும் நோக்கத்தோடு மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயற்படுத்துதல்.
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்தல்
- அனைவருக்கும் சமச்சீர் கல்வி வழங்குவது

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவருக்கும் கல்விக்கான மாநிலத் திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி

இயக்குநரகம், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திடப் பாடுபடுகின்றன.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43. பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2009 - 2010 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.9147.58 கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.1063.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2009-2010 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | கணக்குத் தலைப்பு | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
| 2059 | பொதுப் பணிகள் | | **0.00** | **3335.00** | **3335.00** |
| 2202 | பொதுக்கல்வி | | | | |
| | 01 | தொடக்கக் கல்வி | 45943.96 | 402724.51 | 448668.47 |
| | 02 | இடைநிலைக் கல்வி | 30513.93 | 396697.90 | 427211.83 |
| | 04 | வயதுவந்தோர் கல்வி | 14.92 | 101.40 | 116.32 |
| | 05 | மொழி வளர்ச்சி | 2.53 | 725.12 | 727.65 |
| | மொத்தம் - பொதுக் கல்வி | | **76475.34** | **800248.93** | **876724.27** |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | | **321.59** | **185.39** | **506.98** |
| 2205 | கலையும், பண்பாடும் | | **50.00** | **3517.36** | **3567.36** |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | | **3251.22** | **25.86** | **3277.08** |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | | **0.00** | **513.21** | **513.21** |
| 2251 | தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள் | | **0.00** | **525.21** | **525.21** |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | | **26224.67** | **0.00** | **26224.67** |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | | **0.00** | **5.00** | **5.00** |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | **0.00** | **0.50** | **0.50** |
| | **கூட்டுக - திருப்பி வசூலிப்பவை** | | | | **79.22** |
| | மொத்தம் | | **106322.82** | **808356.46** | **914758.50** |

2009-2010ல் பகுதி **II** புதிய திட்டங்கள்

| தொடர் எண் | திட்டப்பணிகளின் விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **தலைமைச் செயலகம்- பள்ளிக்கல்வித் துறை** | | |
| 1. | தலைமைச் செயலக பள்ளிக்கல்வித்துறையை கணினிமயமாக்கல் | 5.10 |
| 2. | தலைமைச் செயலக பள்ளிக்கல்வித்துறையின் மைய | 0.30 |

| | | |
|---|---|---|
| | கணினி அறைக்கு சீர்வளி சாதனம் பொருத்துதல் | |
| தொடக்கக் கல்வி | | |
| 3. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கு கூடுதல் நிதி வழங்குதல் | 119.66 |
| 4. | 300 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு டி.வி.எஸ் அச்சுப்பொறிகள் வழங்குதல் | 36.00 |
| 5. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல் | 0.53 |
| 6. | உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள்/கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல் | 4.17 |
| பள்ளிக்கல்வி | | |
| 7. | 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 40.00 |
| 8. | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்குதல் | 100.00 |
| 9. | 100 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்துதல் | 40.00 |
| 10. | 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வுக்கூடம் அமைத்துக் கொடுத்தல் | 100.00 |
| 11. | உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கான நிர்வாகம் மற்றும் நிறுவன திட்ட செயல்பாட்டுப் பயிற்சி அளித்தல் | 30.00 |
| 12. | ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் ஆங்கில உச்சரிப்பு குறித்து ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி திட்டம் செயல்படுத்துதல் | 20.00 |
| 13. | 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் | 52.00 |
| 14. | திருவள்ளூர் மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் | 78.00 |
| அரசுத் தேர்வுகள் | | |
| 15. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் உபயோகத்திற்கென இரு நகலெடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல் | 1.20 |
| 16. | அரசுத் தேர்வு இயக்கக பதிவு அறைக்கு பயன்பாட்டிற்கென கனரக இரும்பு நிலை அடுக்கங்கள் வாங்குதல் | 5.00 |
| 17. | அரசுத் தேர்வு இயக்கக மந்தணக் கட்டுகளை வினாத்தாள் கட்டுக்காப்பாளரின் பாதுகாப்பில் வைத்து பாதுகாப்பதற்கென இரு பூட்டுகள் அமைப்பு கொண்ட 750 இரும்பு அலமாரிகள் வாங்குதல் | 75.00 |
| பொது நூலகம் | | |
| 18. | கன்னிமாரா பொதுநூலகம் மூன்றாம் தளத்திலுள்ள பாடநூல் பிரிவிற்கு சீர்வளி சாதன வசதி செய்தல் | 20.00 |
| ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | | |
| 19. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பழுதடைந்த நிலையிலுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீர்செய்தல் | 60.00 |
| 20. | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கணினி வசதியை மேம்படுத்துதல் | 2.75 |
| மெட்ரிகுலேசன் பள்ளிகள் | | |
| 21. | மெட்ரிகுலேசன் பள்ளி இயக்ககத்திற்கு நகலெடுக்கும் | 1.50 |

| | | |
|---|---|---|
| | கருவி ஒன்று வழங்குதல் | |
| **பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி** | | |
| 22. | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக பயன்பாட்டிற்கு 4 கணினிகள் வாங்குதல் | 1.60 |
| **ஆசிரியர் தேர்வு வாரியம்** | | |
| 23. | ஆசிரியர் தேர்வு வாரிய பயன்பாட்டிற்காக 5 கணினிகள் மற்றும் துணை பாகங்கள் வாங்குதல் | 2.25 |
| 24. | ஆசிரியர் தேர்வு வாரிய கணினி அறைக்கு 2 புதிய சீர்வளி சாதனங்கள் வாங்குதல் | 0.80 |
| 25. | ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு பல்வேறு விசாரணை தொடர்பாக வரும் தேர்வாளர்களுக்காக செயல்முறைத் திரை தொடுகணினி வாங்குதல் | 1.00 |
| 26. | ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு மேசை நாற்காலிகள் மற்றும் கோப்புகள் பராமரிப்பதற்கு கோப்பு வைக்கும் அலமாரிகள் வாங்கி நவீனபடுத்துதல் | 2.00 |
| 27. | நகலெடுக்கும் கருவி ஒன்றை புதிதாக வாங்குதல் | 1.50 |
| | **மொத்தம்** | **800.36** |

## அரசின் சாதனைகள்

2006-2007

- 1880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1525 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு தொகுப்பூதியம் அளிக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் அனைவரும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டனர்
- அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாகத் தமிழை ஒரு பாடமாகப் பயில வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டது
- அரசு அனுமதி பெற்று மாநில அரசின் பாடத்திட்டத்தில் தமிழ்வழியில் கற்பிக்கும் அரசு மான்யம் பெறாத பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது
- 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன
- பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் படிகள் எண்ணிக்கை 1000 ஆக உயர்வு
- ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கலந்தாய்வு
- 7635 ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டனர்
- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகப் பள்ளிகளில் கொண்டாடச் சட்டம்
- உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளுக்கு கூடுதலாக 7979 பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம்
- 525 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரி தமிழாசிரியர்கள் பணியிடம் வழங்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன

- 500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பணி மூப்பு அடிப்படையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம்
- 2006 – 2007ல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 1075 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்கு கட்டடம் கட்டப்பட்டது
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 14354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- பொது நூலகத் துறையில் பகுதி நேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 207 பேர் மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

## 2007-2008

- 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன
- நவீன மாநில நூலகம் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டது
- தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 4 ஆம் வகுப்புகளில் செயல்வழிக் கற்றல் முறை தொடங்கி வைக்கப்பட்டது
- கல்வியில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது
- உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பதவிக்கு நேரடி மற்றும் பதவி உயர்வு விகிதம் 30 : 70 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது
- தொடக்கக் கல்வித் துறையிலும், பள்ளிக் கல்வித் துறையிலும் காலி ஏற்பட்ட 13,683 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன
- பொருளாதாரம் / வணிகவியல் பாடங்களில் பட்டம் பெற்று பி.எட். பயின்றவர்களுக்கு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகவும், பட்டதாரி ஆசிரியராகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது
- பள்ளிக் கல்வித் துறையில் அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி அளிக்க மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது
- 443 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாட சாமான்கள் பணிகளுக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டு முதல் தவணையாக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது
- 1583 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர இருக்கைகள், மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேசை நாற்காலிகள் டான்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன
- 1000 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளது
- நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ரூ.2000/- வழங்கப்பட்டுள்ளது
- மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது
- மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது
- நல்லாசிரியர் விருதுத் தொகை ரூ.2,000-த்திலிருந்து ரூ.5,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது
- 8 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன
- கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளி ஆய்வர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன

- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடம், பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி, கணினி மற்றும் நூல் வாங்கிட ரூ.20.21 கோடி வழங்கப்பட்டுள்ளது
- தருமபுரி மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது
- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான பணி அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன
- 76 புதிய நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன
- கோவை, மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புத்தக கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளது
- வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருட பணி முடித்த 27 பகுதிநேர நூலகர்கள், ஊர்ப்புற நூலகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்
- கோவை, தேனி மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் நூலக சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன
- 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன் பாட்டிற்கென கணினிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கோடைக்கால பயிற்சி முகாம் மூலம் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்
- மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.2.25 கோடி செலவில் தமிழ் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன

## 2008 - 2009

- தமிழ் வழியில் பயின்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1000 மாணவ/ மாணவிகளுக்கு மாவட்ட வாரியான தரப்பட்டியல் அடிப்படையில் ஊக்கப்பரிசாக கணினிகள் வழங்கப்பட்டன
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தும் நேரமாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள 10 நிமிடங்களுடன் விடைத்தாளில் விவரங்களை நிறைவு செய்தல் நேரமாக மேலும் 5 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம் மார்ச் 2009 முதல் வழங்கப்படுகிறது
- 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல்
- 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வகங்கள் அமைத்தல்
- அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் 6650 நடுநிலைப் பள்ளிகளில் முதற்கட்டமாக 2200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன
- புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனிநல வாரியம் ஒன்று அமைக்கப்படவுள்ளது
- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் சிறப்புக்கட்டணம் ரத்துசெய்யப்பட்டுள்ளது
- அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப்பாடப் பிரிவில் விவசாயம் பயிலும் மாணவர்களுக்கு கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்
- பள்ளிகளில் கணினிக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 1686 கணினி பயிற்றுநர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்
- பள்ளிக் கல்வித் துறையில் நடப்பாண்டில் கட்டப்படும் அனைத்து கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கட்டடம் என்று பெயர் சூட்டுதல்

- ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொள்ளுதல்
- பேரூராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் சீரமைப்பு பணி மேற்கொள்ளுதல்
- 2008-2009ஆம் அண்டு 1005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன மற்றும் 1577 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன
- 2008-2009 ஆம் கல்வியாண்டில் 9397 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது
- அரசுப் பள்ளிகளின் வளர்ச்சியில் தனியார் பங்கீட்டினை அதிகரிக்க பள்ளி வளர்ச்சித் திட்டம் (School Improvement Scheme) செயல்படுத்துதல்
- பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை (E-Governance) திட்டத்தினை செயல்படுத்துதல்
- அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.192 கோடி செலவில் 5949 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன
- அனைத்து சமத்துவபுரங்களிலும் நூலகங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன
- 100 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன
- கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலகர் அலுவலகம் ரூ.1.00 கோடி மதிப்பிலும் ஈரோடு மாவட்டத்தில் நூலகம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும் கட்டுதல்
- 47 நூலகங்களுக்கு ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்கட்டப்பட்டுள்ளன
- மாவட்டங்களில் செயல்படும் நூலகங்களுக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

மனித வளர்ச்சி உருவாக்கத்தில் கல்வி ஒரு இன்றியமையாத அங்கம் ஆகும். நமது அரசு, 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல் மூலம் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21 வது பிரிவின்படி 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளித்திட மாநில அரசு வழிவகை செய்ய வேண்டும். இந்த அரசியலமைப்புச் சட்டக் கடமையை சேவை ஆர்வத்துடன் எய்திட ஏதுவாக ஏற்கனவே கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் உள்ளது. மாநில அரசு அனைவருக்கும் தரமான கல்வி அளிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும், தொடர் முயற்சிகளையும் எடுத்துள்ளது.

### 1.1. குறிக்கோளும் செயல்பாடுகளும்

1. அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்.
2. விரும்பத்தக்க தரமான கல்வியை உறுதி செய்தல்
3. குழந்தைகளின் ஒட்டுமொத்த உணர்வு வளம், சமுதாய மற்றும் உடல்வளம் இவற்றோடு அறிவாற்றல் திறமைகளையும் மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துதல்.

4. கல்வி பெறாதவர்களுக்குக் கல்வி சென்றடையும்படி செய்தல் மற்றும் சமுதாய உணர்வை உறுதி செய்தல்.

5. அனைத்துப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

6. தொடக்கக் கல்வி நிலையில் அனைத்து பாலின மற்றும் சமுதாய இடைவெளிகளைப் போக்குதல்.

### 1.2. புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்தல்.

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் |
|---|---|---|
| 2006-2007 | 126 | 234 |
| 2007-2008 | 210 | 338 |
| 2008-2009 | - | 1005 |

### 1.3. ஆசிரியர் நியமனம்

பள்ளிகளின் மேம்பாட்டிற்கு அடிப்படையானது, தேவையான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதலே என்பதை உணர்ந்துள்ள அரசு, ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப முன்னுரிமை அளிக்கிறது, இதன் அடிப்படையில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. 2006-2007 ஆம் கல்வி ஆண்டு முதல் நிரப்பப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கல்வி ஆண்டு | ஆசிரியர் பணியிட விவரம் | | |
|---|---|---|---|
| | இடைநிலை ஆசிரியர் | பட்டதாரி ஆசிரியர் | உடற்கல்வி ஆசிரியர் |
| 2006-2007 | 2353 | 2435 | -- |
| 2007-2008 | 5882 | 4124 | 40 |
| 2008-2009 | 5773 | 3331 | 63 |
| 2009-2010 | 1943 | 3209 | 14 |

### 1.4. செயல்வழிக்கற்பித்தல் முறை

அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் புதுமையான செயல்வழிக்கற்றல் முறை தொடக்கப்பள்ளிகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

*செயல்வழிக்கற்றல் என்னும் புதிய கற்பித்தல் முறையின் சிறப்பு இயல்புகள்*

- ❖ குழந்தைகளை மையமாகக் கொண்டது
- ❖ திறன்களை அடிப்படையாகக் கொண்டது
- ❖ கற்போரிடையே தன்முனைப்பு, படைப்பாற்றல், ஒருமைப்படுத்துதல், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கிறது
- ❖ மகிழ்வுடன் கற்கச் செய்கிறது
- ❖ குழந்தைகளை ஊக்குவிக்கும் மையங்களாக பள்ளிகளை மாற்றுகிறது

**1.5. ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்**

குழந்தைகளை மையமாகக் கொண்டு அவர்களைப் பல்திறன் கொண்டவர்களாக உருவாக்கும் கல்வி முறை செயல்படும் இக்காலச் சூழலில், ஆசிரியர்களின் கற்பிக்கும் உத்திகளை வளப்படுத்திக் கொள்ள அனைவருக்கும் கல்வி இயக்கத் (SSA) திட்டத்தின் கீழ் பல்வேறு பணியிடைப்பயிற்சிகள் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் ஒத்துழைப்போடு நிகழ்த்தப்படுகின்றன.

**நலத்திட்டங்கள்**

குழந்தைகளின் வளர்ச்சி என்பது, சமுதாய வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை மனத்திற்கொண்ட அரசு, பள்ளிக் குழந்தைகளுக்கான பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

**1.6. இலவச மதிய உணவுத் திட்டம்**

தமிழக அரசு, பள்ளிகளில் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தின் முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்ந்து வருகிறது. தமிழக அரசின் சிறப்பு அம்சமாக தற்போது பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகள் அல்லது மூன்று வாழைப்பழங்கள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான ஜூலை 15-ஆம் நாள் அன்று துவக்கி வைக்கப்பட்டு தொடந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக 43,76,987 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் செயல்பாட்டால் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை அதிகரித்துள்ளது. இடைநிற்றல் குறைந்துள்ளது.

**1.7. இலவச பாடநூல் வழங்கும் திட்டம்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசின் அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றும் சுயநிதிப்பள்ளிகளில் பயின்று வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாடநூல்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 46,80,244 மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

**1.8. இலவச சீருடை வழங்கும் திட்டம்**

இலவச மதிய உணவுத் திட்டத்தின் கீழ்ப் பயன்பெறும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து செயற்படுத்தப் படும். இதனால் 41,65,272 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.

**1.9. இலவச பேருந்து பயணச் சலுகைத் திட்டம்**

மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்துவரும் மாணவ மாணவிகள் தத்தம் கல்வி நிலையங்களுக்கு வசதியாகச் சென்றுவர இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 2,81,783 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.

**1.10. நடமாடும் நூலகம் மற்றும் அறிவியல் ஊர்தி**

படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிக்க, பொது நூலக இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் நடமாடும் ஊர்திகளின் மூலம் நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து நடமாடும் வகுப்பறைகளாக செயல்படும் அறிவியல் ஊர்திகளின் வாயிலாக, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவியர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் மேம்பாடு அடைய அறிவியல் கல்வி அளிக்கின்றது.

### 1.11. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்

5,534 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் மாநிலத்தில் செயல்பட்டுவருகின்றன. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், பாதுகாப்பு கருதியும் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி இப்பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அப்பள்ளிகளின் செயல்பாடுகளையும் அங்கு பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பினையும் அரசு கண்காணித்து வருகிறது.

### 1.12. சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கும் திட்டம்

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று பள்ளிகளைத் தெரிவு செய்து சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கப்படுகிறது. சிறந்த பள்ளிகள் கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன.

- ❖ கூடுதல் சேர்க்கை விகிதம் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், பெண் குழந்தைகள் சேர்க்கை
- ❖ குறைந்த இடைநிற்றல் விகிதம்
- ❖ கூடுதல் கற்றல் நிறைவு செய்தோர் விகிதம்
- ❖ கூடுதல் தக்க வைத்தோர் விகிதம்
- ❖ பெற்றோர் ஆசிரியர் கழகச் செயல்பாடுகள்
- ❖ சமுதாயப் பங்கேற்பு நிகழ்வுகள்
- ❖ கல்வி மற்றும் சார் செயல்பாடுகளில் புதுமையான கற்றல் முறைகளை ஊக்குவிக்கும் பள்ளிகள்

## அனைவருக்கும் கல்வி இயக்கம்

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அனைத்து பள்ளி வயது குழந்தைகளுக்கும் கல்வி அளித்திட பல்வேறு செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதே அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு இவ்வியக்ககத்தின் பல்வேறு செயல்திட்டங்களையும் சீரான முன்னேற்றத்துடன் செயல் படுத்துவதில் சாதனை செய்துள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் கீழ்குறித்துள்ள குறிக்கோள்களை முழுமையாக அடையும் வகையில் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை இவ்வியக்கம் மேற்கொண்டு வருகிறது.

### 1.13. திட்டக் குறிக்கோள்கள்

- ❖ அனைத்து பள்ளி வயது குழந்தைகளையும், பள்ளிகள் கல்விக் காப்புறுதி மையங்கள், மாற்றுப் பள்ளிகள் மற்றும் "மீண்டும் பள்ளியில் சேர்த்தல் முகாம்" ஆகியவற்றில் சேர்ப்பதை உறுதி செய்தல்,
- ❖ அனைத்து சமுதாய, பாலின வேறுபாடுகளையும் தொடக்கக் கல்வி நிலையில் முற்றிலுமாக களைதல்,
- ❖ வாழ்க்கைக்கு உகந்த தரமான திருப்தியான தொடக்கக் கல்வியை உறுதி செய்தல்,

- ❖ 2010-ல் அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் தக்க வைத்தல்.

**1.14. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் 2008 – 2009 ஆம் ஆண்டின் சாதனைகள்**

*திட்ட மதிப்பீடு மற்றும் செலவினம்*

2008 – 2009 ஆம் ஆண்டில் பல்வேறு செயல் திட்டங்களுக்காக ரூ.844.569 கோடி, செலவிடப்பட்டுள்ளது.

*புதிய பள்ளிகள் தொடங்குதல் மற்றும் ஆசிரியர் நியமனம்*

- ❖ 1005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- ❖ 1577 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

*கட்டிடப் பணிகள்*

9085 பள்ளி வகுப்பறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

*இடைநின்ற மாணவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்த்தல்*

69,071 பள்ளிக் கல்வியைத் தொடராத குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

*ஊனமுற்ற குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வி*

- ❖ 40 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வி வழங்கப்படுகிறது.
- ❖ 19,400 குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ 17,083 இயலாக் குழந்தைகளுக்கு அவர்களது வீடுகளுக்குச் சென்று மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ 304 பகல் நேரக் காப்பகங்கள் செயல்படுகின்றன.

*ஆசிரியர் பயிற்சி*

2 லட்சம் ஆசிரியர்களுக்கு தேவையின் அடிப்படையில் பயிற்சிகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**1.15. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்.**

11-14 வயதுடைய இடைநின்ற பெண் குழந்தைகளின் தொடர் கல்விக்காக கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 11 மாவட்டங்களில் பெண் கல்வியில் பின்தங்கிய 38 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2934 பெண் குழந்தைகள் 54 உண்டு உறைவிடப் பள்ளிகளில் கல்வி பெறுகின்றனர். 2008-2009 ஆம் ஆண்டில் இப்பள்ளிகள் மூலம் 8 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவிகளில் 95% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் தொடர்ந்து 9 ஆம் வகுப்பில் இவ்வாண்டு சேர்ந்து படிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**1.16. தரமேம்பாட்டுச் செயல்பாடுகள்**

பள்ளிகளின் தரத்தினை மேம்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து 37,486 தொடக்கப் பள்ளிகளிலும் செயல்வழிக் கற்றல் முறை செயல்படுத்தப்படுகிறது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளுக்கு படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் செயல்பாடுகளின் மூலம் கற்றலில் ஈடுபட்டு, கற்பதற்கு ஏதுவாக ஆசிரியர்களின் பணி அமைந்துள்ளது. இப்புதிய கற்றல் கற்பித்தல் முறைகளின் மூலம் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை வளர்கிறது. புதிய கலைத் திட்டம் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள புதிய அணுகுமுறைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

**1.17. கல்விக் குறியீடுகளின் முன்னேற்றம்**

தொடக்கநிலையில் 2005-2006ல் 1.91% ஆக இருந்த இடைநிற்றல் 2007-2008ல் 1.23% ஆகவும், நடுநிலையில் 2005-2006ல் 4.08% ஆக இருந்த இடைநிற்றல் 2007-2008ல் 1.90% ஆகவும் குறைந்துள்ளது.

**1.18. 2009-2010 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள முக்கிய செயல் திட்டங்கள்**

*கட்டிடப் பணிகள்*

- 2009-10 ஆம்ஆண்டு நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.
- 3871 கழிப்பறைகளும், 437 குடிநீர் வசதிகளும் பள்ளிகளில் ஏற்படுத்துதல்.
- 6,7,8 வகுப்புகளில் பயிலும் 9,29,940 மாணவர்களுக்கு மேஜை, நாற்காலி வசதி ஏற்படுத்துதல்.

*மான்யங்கள்*

- 5 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் மான்யமாக பள்ளி ஒன்றிற்கு ரூ.20,000/- வீதம் வழங்குதல்.
- 831 தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் மான்யமாக பள்ளி ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் வழங்குதல்.
- ரூ.7,500 வீதம் 35,236 பள்ளிகளுக்கு பராமரிப்பு மான்யம் வழங்குதல்.
- ரூ.5,000 வீதம், 37,792 பள்ளிகளுக்கும் ரூ.7,000 வீதம் 15,050 பள்ளிகளுக்கும் பள்ளி மான்யம் வழங்குதல்.
- தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 2,09,918 ஆசிரியர்களுக்கு ரூ.500 வீதம் கற்றல் கற்பித்தல் மான்யம் வழங்குதல்.

*இடைநின்ற மாணவர்களை பள்ளியில் சேர்த்தல்*

- 66,896 இடைநின்ற மாணவர்கள் உண்டு உறைவிட முகாம், இணைப்பு மையம், கோடைகாலச் சிறப்பு முகாம் மற்றும் சிறப்பு உண்டு உறைவிட முகாம் போன்ற செயல்திட்டங்கள் மூலம் தொடர்ந்து கல்வி பெறுவார்கள்.

*உள்ளடங்கிய கல்வி*

- சுமார் 1.18 இலட்சம் இயலாக் குழந்தைகளை இத்திட்டத்தில் சேர்த்தல்.
- உதவி உபகரணங்கள் 19,477 குழந்தைகளுக்கு வழங்குதல்.
- 45,495 ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

*பணியிடைப் பயிற்சி*

சுமார் இரண்டு இலட்சம் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்குதல்.

*புதிய அணுகுமுறைத் திட்டம்.*

- ❖ பள்ளிகளுக்கு 3000 கணினிகள் வழங்குவதோடு 19,400 ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்குதல்.
- ❖ முன்பருவ மழலையர் கல்வித் திட்டம் மூலம் 20,315 அங்கன்வாடி பணியாளர்களுக்குப் பயிற்சியும் 6383 மையங்களுக்கு விளையாட்டு / கல்வி உதவி உபகரணங்களும் வழங்குதல்.
- ❖ 58,590 மாணவிகளுக்கும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த 85,860 மாணவ மாணவிகளுக்கும் ஆங்கில அறிவில் திறன் சார் பயிற்சி வழங்குதல்.

*கிராம கல்விக் குழு உறுப்பினர் பயிற்சி*

கிராமக் கல்விக் குழுக்களைச் சார்ந்த 1.75 இலட்சம் உறுப்பினர்களுக்கு பள்ளி மேம்பாடு மற்றும் வளர்ச்சி பற்றி பயிற்சி அளிக்கப்படும்.

**1.19. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா**

11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 38 ஒன்றியங்களில் செயல்படும் 54 உண்டு உறைவிட பள்ளிகளை தொடர்ந்து நடத்துதல்.

50 மாணவிகளுடன் செயல்படும் 3 உண்டு உறைவிடப் பள்ளிகளை 100 மாணவிகள் கொண்ட பள்ளிகளாக தரம் உயர்த்துதல்.

**மேற்கூறிய செயல்பாடுகள் அனைத்தும் ரூ.862.309 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி

**2.1. நோக்கங்கள்**

இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தி அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தரமான இடைநிலைக் கல்வி கிடைப்பதை உறுதி செய்வதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

**2.2. முக்கிய குறிக்கோள்கள்:**

1. தேவையுள்ள இடங்களில் போதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்துதல்
2. சேர்க்கை விகிதத்தை உயர்த்துதல்
3. உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏற்கனவே உள்ள வசதிகளை மேம்படுத்துதல்.
4. திறமையாக கற்பிப்பதற்கு ஏதுவாக ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்துதல்.
5. கணினிக் கல்வியை பயிற்றுவித்தல்
6. வாழ்வியல் திறன்கள் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி அளித்தல்
7. மொழித்திறன் மற்றும் கருத்து பரிமாற்றத்தினை மேம்படுத்துதல்

**2.3. வழிமுறைகள்**

பின்தங்கிய பகுதிகளில் புதிய உயர்நிலைப்பள்ளிகள்/ மேல்நிலைப்பள்ளிகள் துவக்குதல், சிறப்பு மாணவர் சேர்க்கைத் திட்டங்களை மேற்கொள்ளுதல், நபார்டு வங்கியின் உதவியுடன் நிதி ஆதாரங்கள் பெற்று, தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கற்பிப்பு மற்றும் கற்கும் திறனை அதிகரிப்பதற்காக மின் கற்றல் (e-learning) மற்றும் கணினி வழி தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், ஆசிரியர்களுக்கு பணி முன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சி வசதிகளை அதிகரித்தல், சமூகத்தின் நலிவுற்ற பிரிவுகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிப்பது மற்றும்

நலத்திட்டங்களை விரிவுபடுத்துதல் ஆகிய வழிமுறைகள் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் எட்டப்படும்.

**நலத்திட்டங்கள்**

**2.4. இலவச பாடப்புத்தகங்கள் வழங்குதல்**

தமிழக அரசால் தரமான பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு அவை அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், மற்றும் சுயநிதி பள்ளிகளில் மாநில பாடத்திட்டத்தின் கீழ் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் கல்வி ஆண்டில் 6002779 க்கு மேற்பட்ட மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். மேலும் 2008 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 83652 மாணவர்களுக்கு ரூ. 3.34 இலட்சம் மதிப்பில் புதிய பாடப்புத்தகங்கள் இலவசமாக மறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**2.5. இலவச மிதிவண்டி வழங்குதல்**

அரசு / அரசு நிதி உதவி பெறும் / பகுதி நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 12658 இதர வகுப்பின மாணவர்கள் உட்பட 5,60,381 மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென ரூ.3,65,78,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

**2.6. இலவச பேருந்து சீட்டு**

மாணவர்களுக்கு இலவச மற்றும் கட்டணச் சலுகைப் பேருந்து பயணச்சீட்டுகள் வழங்கும் திட்டத்திற்கு இவ்வாண்டு ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.7. ஆங்கில மொழி ஆய்வகங்கள் மற்றும் கணினி வழி மொழி பயிலும் ஆய்வகங்கள்**

மாணவர்களின் ஆங்கில உரையாடல் திறன்களை வளர்க்கவும், நல்ல வேலை வாய்ப்புகளை மாணவர்கள் பெறவும் ஆங்கில மொழி ஆய்வகங்கள் நிறுவிட பள்ளிகளை தேர்வு செய்து, ஒரு பள்ளிக்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் எல்காட் நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2008-09 ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் அரசால் இத்திட்டத்திற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும் தற்போது செயல்படும் ஆங்கில மொழி ஆய்வகங்களை, கணினிவழி மொழி பயிலும் ஆய்வகங்களாக மாற்றிட 500 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.52.00 இலட்சம் செலவில் கூடுதலாக சில உபகரணங்கள் ஏற்கனவே உள்ள கணினி ஆய்வகங்களில் நிறுவப்படும்.

**2.8. கணித ஆய்வகங்கள்**

கணித பாடத்தினை கற்பிக்கவும், மாணவர்களுக்கு புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி அதன் மூலம் கணிதத்திறனை செய்முறை வழியில் கற்பிப்பதற்கும் கணித ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் கிராமப்புறப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில்

பயிலும் மாணவர்களுக்கு உதவும் நோக்கில் அமைந்துள்ளது. 100 அரசு உயர்நிலைப்பள்ளிகளில் முதற்கட்டமாக கணித ஆய்வகங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதற்காக அரசு ஒரு பள்ளிக்கு 1.00 இலட்சம் வீதம் ஒப்பளிப்பு செய்து, 2008-09 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2.9. தமிழ் வழியில் பயின்ற மாணவர்களில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு கணினி வழங்குதல்**

2008 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதி முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசாக 'மடிகணினி' வழங்கும் புதிய திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் ரூ. 326.50 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் 1100 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.10. அறிவியல் ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல்**

ஒவ்வொரு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளியிலும் அறிவியல் பாடத்தினை கற்பிக்க போதிய அறிவியல் உபகரணங்களுடன் ஆய்வகங்கள் அமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. 2008-2009 ஆம் கல்வியாண்டில் அறிவியல் உபகரணங்கள் வாங்கிட உயர்நிலை பள்ளிகளுக்கு ரூ 50.00 இலட்சமும், மேல்நிலை பள்ளிகளுக்கு ரூ. 90.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.11. நூலக வசதிகளை மேம்படுத்துதல்**

மாணவர்களிடையே புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தினை ஊக்குவித்திடும் வகையில் 100 அரசு உயர்நிலை மற்றும் 100 அரசு மேல்நிலை பள்ளி நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கிட 2008-2009 ஆம் கல்வியாண்டில் ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.12. மேல்நிலைப் பள்ளிகளில் கணினி வசதியளித்தல்**

மாணவர்களிடையே கணினிப் பயன்பாட்டினை வளர்க்கும் நோக்கத்துடன் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. 1980 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கும் 1525 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும், இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 100 அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 606 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2008-2009 ஆம் கல்வி ஆண்டில் கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2009-10 ஆம் கல்வி ஆண்டில் கணினி கல்வித் திட்டத்தினை மேலும் முன்னேற்றம் அடைய செய்யத்தக்க வகையில் ஏற்கனவே கணினி வழங்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வசதிகள் செய்து தர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.13. உயர்நிலைப்பள்ளிகள் துவக்குதல்**

2006-07 ஆம் ஆண்டில் 120 நடுநிலைப்பள்ளிகளும், 2007-2008 ஆம் கல்வியாண்டில் 110 நடுநிலைப்பள்ளிகளும், 2008-2009 ஆம் கல்வி ஆண்டில் 100

நடுநிலைப்பள்ளிகளும், 2009-2010 ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப்பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**2.14. மேல்நிலைப் பள்ளிகள் துவக்குதல்**

2006-07 ஆம் கல்வியாண்டில் 120 உயர்நிலைப் பள்ளிகளும், 2007-08 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளும், 2008-09 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளும், 2009-2010 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப்பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன.

**2.15. பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை**

தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் பள்ளிக் கல்வித் துறைக்கென தனித்தன்மை வாய்ந்த வலைத்தளம் (www.pallikalvi.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த வலைத்தளம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படும்.

பள்ளிக் கல்வித்துறையில் திறன்மிக்க வெளிப்படையான நிர்வாகத்துக்குத் துணைபுரியும் வகையில் இவ்வலைத்தளம் செயல்படும். மேலும் ஆர்வமுள்ள நன்கொடையாளர்கள், பொதுத் துறையோடு தனியார் துறை கூட்டு சேர்ந்து பணியாற்ற உதவுவதற்காக பல்வேறு கல்வி நிறுவனங்களின் தேவைகளைப்பற்றித் தெரிந்து கொள்ள தகவல் அளிக்கும் வகையில் இவ்வலைத்தளம் உதவும்.

**2.16. தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் பொதுத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**2.17. சிறப்பு கட்டணம் இரத்து.**

2008-09 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பல இலட்சம் மாணவர்களின் நலன் கருதி முற்றிலும் இலவசக் கல்வி வழங்கிடும் வகையில் சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டுள்ளது. இக்கட்டணத்தினை அரசே ஏற்று ரூ.21.40 கோடியினை பள்ளிகளுக்கு திரும்ப அளித்துள்ளது.

**2.18. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி**

நமது மாநிலத்தில் "அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம்" வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டபின், ஒவ்வொரு குழந்தையும் 10 வருட பள்ளிக்கல்வியினை முடிப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் "அனைவருக்கும் இடைநிலைக் கல்வி" என்ற இலக்கினை எட்டுவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவியுடன் இடைநிலைக் கல்வியில் தரமான கல்வியினை வழங்குவதற்காக "SUCCESS" எனும் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமிக்க இடைநிலைக் கல்வி வழங்குவதும், 2020 ஆம் ஆண்டிற்குள் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின்

நோக்கமாகும். 2009-2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென மாநில அரசின் பங்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் 20 மாதிரி பள்ளிகளைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.19. இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்**

மைய அரசின் உதவிபெறும் திட்டமான இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் பள்ளிகளில் உள்ள இயலாக் குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசு 100% நிதியுதவி வழங்கிவருகிறது.

**2.20. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி**

மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வியினை சீராய்வது மற்றும் தற்போதைய தேவைக்கேற்ப தொழிற்கல்வியினை சீரமைப்பதற்காக உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. உரிய மேல்நடவடிக்கைகள் பள்ளிக்கல்வி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.21. நாட்டு நலப்பணித்திட்டம்**

மாணவர்கள் தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, சமூக சேவை மனப்பான்மை போன்ற பண்புகளை அடையத் துணை செய்வதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு மைய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. இத்திட்டம் மாநிலத்தில் தற்சமயம் 1940 மேல்நிலைப்பள்ளிகளில் 97000 மாணவ, மாணவியருடன் செயல்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 294.97 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படவும், இத்திட்டம் செயல்படாத இதர மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் சென்றடைவதற்கும் இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**2.22. சாரண மற்றும் சாரணியர் இயக்கம்**

சாரண, சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் 5850 பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தில் தற்பொழுது 1,18,043 மாணவர்களும், 59,908 மாணவியர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். பொது இடங்களை சுத்தப்படுத்துதல், மரம் வளர்த்தல், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முதலுதவி செய்தல் ஆகிய சமூக சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இவ்வியக்கம் வகை செய்கிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் சாரண, சாரணியர் இயக்கத்தில் சிறந்த சேவை புரிபவர்களுக்கு "இராஜ்யபுரஸ்கார்" விருது வழங்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5/- இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.23. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

தமிழ் நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் பெரும்பான்மையான பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியரே இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்கத்தில் மாணவர்கள், இளைஞர் செஞ்சிலுவை மாணவத் தொண்டர்களாகவும்,

ஆசிரியர்கள் பயிற்றுநர்களாகவும் உள்ளனர். தமிழ் நாட்டில் இவ்வியக்கம் 5465 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 198676 மாணவர்களுடனும், 242374 மாணவியர்களுடனும் செயல்பட்டு வருகிறது.

**2.24. சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்**

சுற்றுப்புற சூழல் குறித்த கல்வியறிவிற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு அளித்து அதன் வாயிலாக சுற்றுச்சூழல் குறித்த சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மூலம் மாநில அரசின் நிதியுதவியுடன் ஒரு மாவட்டத்திற்கு 40 பள்ளிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு 30 மாவட்டங்களில் 1200 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக மாவட்டம் ஒன்றுக்கு ரூ.1,00,000/- வீதம் அந்தந்த மாவட்ட அமைப்பாளர் மூலம் நிதி வழங்கப்படுகிறது.

இது தவிர, மத்திய அரசின் தேசிய பசுமைப்படை திட்டமானது ஒரு மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம் 30 மாவட்டங்களில் 7500 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு பள்ளிக்கு ரூ.2,500/- வீதம் 250 பள்ளிகளுக்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையினரால் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**2.25. விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள்:**

அனைத்து பள்ளிகளிலும் 6,7,8 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் சிறப்புத் திறமைகளை அறியும் பொருட்டு ஐந்து தொடர் தேர்வுகள் நடத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இளைஞர் நல மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இத்திட்டத்தின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்கும் திறமை வாய்ந்த மாணாக்கர்களைக் கண்டறிகிறது.

உடற் கல்விக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு பாடவேளைகளில் ஒரு பாட வேளையை முழுமையாக யோகா பயிற்சிக்கென ஒதுக்கி 2008-09 ஆம் ஆண்டில் அரசு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. யோகா பயிற்சி பெற்ற உடற் கல்வி ஆசிரியர்களைக் கொண்டு உடற்கல்வி பாடத்துடன் யோகா பயிற்சியும் மாணாக்கர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**2.26. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது (ஆசிரியர்களுக்கான மாநில விருது):**

முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் திரு.இராதாகிருஷ்ணன் நினைவாக ஆண்டுதோறும் மாநிலத்தில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது 1960 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது 1997 முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி வழங்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் கல்வியாண்டு முதல் ரூ. 2000/- விருதுத் தொகை ரூ. 5000/- ஆக உயர்த்தப்பட்டு வெள்ளிப்பதக்கமும் நற்சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

**2.27. ஆசிரியர்களுக்கான தேசிய விருது**

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் மூலம், நாடு முழுவதும் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர்களில் தமிழகத்திலிருந்து 22 ஆசிரியர்கள் இந்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு டில்லியில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் ஆசிரியர்கள் தினத்தன்று இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறும் ஆசிரியர்களுக்கு ரூ.25,000/- ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், நற்சான்றிதழும் போக்குவரத்து செலவினமும் வழங்கப்படுகிறது.

**2.28. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்**

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962 ல் நிறுவப்பபட்டது. மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களை அலுவல் வழி தலைவராகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை அலுவல் வழி செயலாளராகவும் கொண்டு இந்நிறுவனம் இயங்குகிறது. ஆசிரியர் தின கொடி விற்பனை நிதியைப் பயன்படுத்தி பல்வேறு ஆசிரியர் நலத் திட்டங்கள் இதன் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

**2.29. முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை**

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தை ஆரம்பித்தது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது. இப்பரிசுத் தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ.50,000/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ.30,000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ.20,000/- |

அதே போன்று, மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பரிசுத்தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ.25000/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ.20000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ.15000/- |

மேலும் மேல்நிலைத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப்பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், சுயநிதி பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து-1) பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்கல்விக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கிறது.

இது தவிர மாவட்ட அளவில் முதலிடம் பெறும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவினமாக ரூ.1500/- வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணாக்கர்களின் மேற்கல்விக்கான முழு செலவையும் மாநில அரசே ஏற்கிறது.

இது தவிர பாடவாரியாக மாநிலத்தில் முதலிடம் பெறும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

**2.30. தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வு திட்டம்**

கிராமப்புற பள்ளிகளில் பயிலும் திறன் மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக இத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரால் இத்தேர்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 மாணவர்கள் 50 மாணவிகள் என மொத்தம் 100 மாணவர்கள் இத்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ 1000/- வீதம் 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்புவரை பயில்வதற்காக தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதற்காக அரசு ஆண்டுதோறும் ரூபாய் 1 கோடி நிதி வழங்குகிறது. இந்த உதவித் தொகை பெறும் மாணவரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2.31. தேசிய வழிவகை மற்றும் தகுதி உதவித் தொகை திட்டம்**

இத்திட்டம் மத்திய அரசால் 2008-09 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசு தேர்வு இயக்கத்தால் 8வது வகுப்பு மாணவ மாணவியருக்கு நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியருக்கு மாதம் ரூ 500/- வீதம் 12 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தேர்வு நடத்துவதற்கான செலவினம் ஒரு மாவட்டத்திற்கு ரூ 75,000/- வீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 6695 மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

**2.32. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக் கொணரப்படுகின்றன. பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியம் வரைதல், வினாடிவினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் போன்ற பல போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும், போட்டிகள் நடத்தப்பட்டு, பின் இறுதியாக மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன. போட்டிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசுகளும், பத்திரங்களும் வழங்கப்படுகின்றன.

**2.33. மாணவர்களுக்கான துயர்துடைப்பு நிதியுதவி**

இத்திட்டத்திற்காக அரசு 2009-2010 ஆம் ஆண்டிற்கு ரூ.175 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் (தாய் அல்லது தந்தை) விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடமாக்கப்பட்டாலோ அம்மாணவர்களுக்கு ரூ.50,000 நிதியுதவி கிடைக்கும்.

**2.34. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் - 2006**

இத்திட்டத்தின் கீழ் பத்தாம், மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கீழ்க்காணும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| | மாணவர் | மாணவியர் |
|---|---|---|
| 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1250 | ரூ.1500 |
| 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1750 | ரூ.2000 |

2008-2009 ஆம் ஆண்டு ரூ.8,05,85,000/- ஒதுக்கப்பட்டு பத்தாவது தேர்வு பெற்ற மாணவ மாணவியருக்கு ரூ.5,47,97,000-மும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு ரூ.57,88,000-மும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.35. நபார்டு வங்கி - நிதியுதவித் திட்டம்**

நபார்டு வங்கி நிதி உதவி திட்டத்தின் கீழ், உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அதாவது வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பிடங்கள், குடிநீர் வசதி, மின் வசதி மற்றும் சுற்றுச் சுவர் அமைத்து தரப்பட்டுள்ளது. 1 முதல் 9 கட்டங்களில் 2004 பள்ளிகளுக்கு ரூ.1181.97 கோடி மதிப்பீட்டில் மேற்குறிப்பிடப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்று முதல் மூன்று கட்டங்களில் இடம் பெற்ற 605 பள்ளிகள் கட்டிடப் பணி முடிவு பெற்றுள்ளது. நான்கு முதல் ஏழு கட்டங்களில் இடம் பெற்ற 978 பள்ளிகளில் கட்டிடப்பணி முடியும் நிலையில் உள்ளது. எட்டு முதல் ஒன்பது கட்டங்களில் இடம் பெற்ற 421 பள்ளிகளில் கட்டிட வசதிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. 1 முதல் 7 கட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு ரூ.11391.05 இலட்சம் செலவில் சுற்றுப்புறச்சுவர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது..

நபார்டு திட்டத்தின் கீழ் கட்டம் 1 முதல் 7 முடிய உள்ள பள்ளிகளில் கட்டப்பட்ட 594 உயர்நிலை மற்றும் 518 மேல்நிலை பள்ளிகளின் அறிவியல் ஆய்வகக் கூடங்கட்கு அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்பட ரூ.8.31 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டம் 8 ன் கீழ் கட்டப்பட்டுள்ள பள்ளிகளின் அறிவியல் ஆய்வகக் கூடங்கட்கும் அறிவியல் ஆய்வக உபகரணங்கள் ரூபாய் 44 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**2.36. நபார்டு வங்கி நிதி உதவியுடன் அரசு பள்ளிகளில் இருக்கை வசதிகள் ஏற்படுத்துதல்**

நபார்டு வங்கி நிதி உதவியுடன் பகுதி 1 முதல் 7 முடிய உள்ள கட்டங்களில் அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளுக்கு RIDF-XII திட்டத்தின் கீழ் இருக்கை வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு ரூ 69.10 கோடி ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி 29 மாவட்டங்களில் 1530 அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15845 வகுப்பறைகளுக்கு மாணாக்கர்களுக்காக 190140 பெஞ்சு மற்றும் 190140 சாய்வு மேசைகள் வழங்கப்பட்டு வருகின்றன ஆசிரியர்களுக்காக 15845 மேசைகளும் 15845 நாற்காலிகளும் டான்சி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**2.37. பெற்றோர் ஆசிரியர் கழகம்**

பெற்றோர் ஆசிரியர் கழகம் சங்கச் சட்டம் 1975 இன்படி பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பைக் கைவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச்

செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பொதுமக்களிடமிருந்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் நன்கொடையாகப் பெறப்படுகின்றன. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் வினாவங்கி ஏடுகள் (Question Bank) வெளியிடப்பட்டது.

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சுயநிதி அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தின்படி, ஆங்கில வழியில் கல்வி கற்பித்து வருகின்றன. 1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட "மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு" இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி நலனைக் கருத்திற் கொண்டு, பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான பள்ளி உட்கட்டமைப்பிற்கான விதிகளை உள்ளடக்கிய விதிமுறைகளை வகுத்து அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் 3619 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் 15 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்கள் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

### 3.1. தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006 எண். 3 (1) ன்படி தமிழ் பாடம் கட்டாய மொழிப் பாடமாக ஒன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிப்படியாக பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதன்படி 2006-2007 ஆம் கல்வியாண்டில் முதல் வகுப்பிலும் தொடர்ந்து வரும் வருடங்களில் அடுத்தடுத்த வகுப்புகளிலும் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி கீழ்க்குறித்தவாறு பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பகுதி I | தமிழ் (கட்டாயப் பாடம்) |
| பகுதி II | ஆங்கிலம் ( கட்டாயப் பாடம்) |
| பகுதி III | இதர பாடங்கள் (கணிதம் அறிவியல் சமூக அறிவியல் போன்றவை) |
| பகுதி IV | தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்டிராத மாணாக்கர் தமது தாய் மொழியை விருப்பப் பாடமாகப் பயிலலாம். |

இதனையடுத்து தமிழ் மொழிப்பாடம் பகுதி 1ல் கட்டாயப் பாடமாக படிப்படியாக பயிற்றுவிக்க ஏதுவாக உரிய அறிவுரைகள் மெட்ரிகுலேஷன் மற்றும் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி முதல்வர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 1 முதல் 4ஆம் வகுப்புகள் வரை அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயத் தமிழ் மொழிப் பாடம் கற்பிக்க அனைத்துப் பள்ளிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

### 3.2. இலவச தமிழ்ப் பாடநூல்கள்

மெட்ரிகுலேஷன் / மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டு முதல் தமிழ்ப்பாட நூல்கள் தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் வாயிலாக இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. ரூ.2.25 கோடி செலவில் 21,01,909 மாணவர்களுக்கு தமிழ் பாடநூல்கள் இலவசமாக விநியோகிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் 2009-2010ஆம் கல்வியாண்டிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

## 3.3. LKG / UKG வகுப்புகள் துவங்க அனுமதி / அங்கீகாரம்

மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு விதிகளின்படி தற்போது 1-10 மற்றும் 1-12வகுப்புகளுக்கு மட்டுமே பள்ளிகள் துவங்க அனுமதி / அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. பெரும்பாலான மெட்ரிகுலேஷன் / மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் LKG வகுப்பு முதல் மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டு கல்விபயின்றுவருவதால் LKG மற்றும் UKG வகுப்புகளையும் ஒன்றினைத்து LKG மற்றும் UKG வகுப்புகள் துவங்க அனுமதி / அங்கீகாரம் வழங்குவது குறித்த வரையரைகளை நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பிலும் LKG மற்றும் UKG வகுப்புகளை உள்ளடக்கி உரிய திருத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.4. முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை

2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு (மெட்ரிக்) பொதுத் தேர்வில் மாநில அளவில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து முதல் மூன்று தரம் பெற்ற மாணாக்கர்களுக்கு கீழ்க்குறிப்பட்டவாறு ரொக்கப் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.25,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.20,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ.15,000/- |

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணியில் சேர்ந்த பின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியிடைப் பயிற்சி வழங்கி கற்பிக்கும் திறனை மேம்படுத்துவது இவ்வியக்ககத்தின் நோக்கமாகும்.

### 4.1. துறையின் தொலைநோக்கு:-

- அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களையும் மாவட்ட வள மையங்களாக மாற்றுதல்.
- கல்வியின் புதிய கண்டுபிடிப்புகளையும், ஆய்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் தளங்களாக மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களை வளர்த்தல்.

- ❋ தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், தேசிய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம் மண்டலக் கல்வி நிறுவனங்கள், மண்டல அளவிலான ஆங்கில மொழி நிறுவனம் போன்ற தேசிய மற்றும் உலகளவிலான கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை விரிவாக்குதல்
- ❋ அவ்வப்போதைய காலக் கட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்கி கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை வடிவமைத்தல் மற்றும் சீரமைத்தல்.
- ❋ தொழில்நுட்ப உபகரணங்கள் வழியான கற்றலை வளப்படுத்த பயிற்சிக் கையேடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஒளி-ஒலி கல்வி மென்பொருள்களைப் உருவாக்குதல்.

### 4.2. தரமான கல்வியை எதிர்நோக்கி

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் பணியிடைப் பயிற்சிகள், கல்வியாளர் முன்னேற்றத் திட்டங்கள், கல்விப் பயணங்கள், மாவட்ட அளவிலான கருத்தரங்கங்கள், செயலாராய்ச்சிகள் மற்றும் கல்வி ஆராய்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வருகின்றன. இச்செயல்பாடுகள் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன கல்வியாளர்களின் தொழில்தரத்தினை மேம்படுத்துவதோடு மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களின் தேவைகளுக்கேற்ப அறிவு மற்றும் திறன்களில் பயிற்சி அளிக்கவும் உதவுகிறது.

### 4.3. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் நிலை

தற்போது மாநிலத்தில் 751 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் 51380 மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்கலாம். அரசு இடங்கள் அனைத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தால் நிரப்பப்படுகிறது.

### 4.4. வளரிளம் பருவக் கல்வித் திட்டம்

வளரிளம் பருவக் கல்வித் திட்டம் 9 மற்றும் 11 வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான வாழ்வியல் திறன்களை கற்பித்துள்ளது. அதன் மூலம் சுகாதாரத்தை பாதிக்கும் செயல்களிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்கின்றனர். வாழ்வியல் திறன் கல்வி 9722 பள்ளிகளில் உள்ள வளரிளம் பருவ மாணவர்களுக்கு தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் நிதி உதவியுடன் கற்பிக்கப்பட்டது.

### 4.5. ஆங்கில மொழி ஆய்வகங்கள்

17 மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனங்களிலும், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரிலும் 2008-2009ல் ஆங்கில மொழி பயிற்றாய்வகங்கள் நிறுவப்பட்டு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும், ஆங்கில உரையாடல் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாய்வகங்கள் மூலமாக 400 ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்கள் தங்கள் ஆங்கில வழி உரையாடல் திறனை அடைவர்.

### 4.6. புதிய வளநூல்களை உருவாக்குதல்

தேசியக் கலைத்திட்டம் 2005-இன் அடிப்படையில், ஆசிரியர் பட்டயப் பயிற்சியின் கலைத்திட்டத்தையும், பாடத் திட்டத்தையும் மாற்றியமைக்கும் பணியை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் மேற்கொண்டது. திறமை மிக்க கல்வி வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களின் அனுபவத்தையும் திறமையையும் பயன்படுத்தி, ஆசிரியர் கல்வி பாடங்களுக்கான

பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. 2008-2009 ஆம் கல்வியாண்டிலிருந்து புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 4.7. தேசிய மக்கள் தொகை கல்வித் திட்டம்

மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதி உதவியுடன், தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டம், ஆசிரியர் கல்வி ஆசிரியர் பயிற்சி இயக்ககத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் தேசிய மக்கள் தொகை கல்வித் திட்ட செய்திமலர் வெளியிட திட்டமிடப் பட்டுள்ளது.

### 4.8. நாட்டு நலப் பணித்திட்டம்

நாட்டு நலப் பணித்திட்டம் 34 அலகுகளில் 1700 ஆசிரியர் பயிற்சி மாணவ தொண்டர்களுடன் (29 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் 5 அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலும்) துவங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலகும் 50 ஆசிரியர் பயிற்சி மாணவ தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டது.

### 4.9. கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம்

கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தின் மூலம் கல்வி சார் பாடக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பான வரைவுகள் தயாரிக்கப்பட்டு தொடக்கக்கல்வி அளவில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்நிகழ்ச்சிகள் திங்கள் மற்றும் வெள்ளி தோறும் சென்னை தொலைக் காட்சி நிலையத்தின் “காண்போம் கற்போம்” கல்வி நிகழ்ச்சியில் ஒளிப்பரப்பு செய்யப்படுகின்றன.

### 4.10. கல்விச் செயற்கைக் கோள்

கல்விச் செயற்கைக் கோள் வழி தொலையரங்க முறையை பின்பற்றி கடந்த ஆண்டு கல்வி தொடர்பான 24 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் மூலம் ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் 400 முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் 200 வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களும் பயனடைந்துள்ளனர். மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது செவ்வாய் கிழமைகளில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. 2009-2010 ஆம் கல்வியாண்டில் 600 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் கல்வி பயிற்றுநர்களுக்கு 30 நிகழ்ச்சிகள் மூலம் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.11. புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு நுழைநிலைப் பயிற்சி

புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு நுழைநிலைப் பயிற்சியளிக்கப்படுகிறது. 1269 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 1849 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நுழைநிலைப் பயிற்சி வழங்கப்பட்டது.

### 4.12. பணியிடைப் பயிற்சி

2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் முறைகளில் 2009-2010-ஆம் ஆண்டில் பணியிடைப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 9902 ஆசிரியர்கள் இப்பயிற்சி மூலம் பயனடைவர்.

**4.13. புதிதாக இரண்டாக பிரிக்கப்பட்ட பெரம்பலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களை நிறுவுதல்**

புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களான பெரம்பலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை உருவாக்க மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**4.14. மின் ஆளுமை**

உலகமயமாதல் மற்றும் தொழில் நுட்பப்புரட்சி போன்ற மாற்றங்களின் விளைவாக ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் இணையதளத்துடன் இணைக்கப்பட்டு அனைத்து தகவல் பரிமாற்றங்களும் மின்னஞ்சல் மூலம் நடைபெறுகிறது. இவ்வியக்ககத்தின் வலைதளமான www.dtert.tn.nic.in-ல் இவ்வியக்கக முக்கிய செயல்பாடுகள் திட்டங்கள் குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## 5. பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

எழுத்தறிவற்ற 15-35 வயதுடைய பிரிவினருக்கு செயல்முறை எழுத்தறிவு வழங்குதல், தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலும் வளர்கல்வி மையங்களை உருவாக்கி கற்கும் சூழல், பொழுதுபோக்கு செயல்பாடுகளுடன் சுய வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்தல் மற்றும் எழுத்தறிவு பெற்றவர்களின் பாலின இடைவெளியைக் குறைப்பதற்காக மிகவும் பின்தங்கிய அனைத்து மாவட்டம்/வட்டாரங்களிலும் மகளிர் சிறப்பு எழுத்தறிவு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது ஆகியவை இத்துறையின் தொலை நோக்கு அடிப்படையிலான குறிக்கோள் ஆகும்.

**5.1. வளர்கல்வித்திட்டம்**

வளர் கல்வித் திட்டமானது “முழு எழுத்தறிவு இயக்கம்” மற்றும் “தொடர்கல்வித்திட்டம்” ஆகியவற்றின் தொடர்ச்சியாக எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்காக இதுவரை 82.12 கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழகத்திலுள்ள 31 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 12632 வளர்கல்வி மையங்கள் மற்றும் 1475 தலைமை வளர்கல்வி மையங்கள் உள்ளன. இதன் பயனாளிகள் 58.96 இலட்சம் ஆவர். இதில் 23.27 இலட்சம் ஆண்களும், 35.69 இலட்சம் பெண்களும் அடங்குவர்.

**5.2. மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்**

மகளிர் எழுத்தறிவு விகிதம் குறைந்து காணப்படும் பகுதிகளில் மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் மாநிலத்தில் மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.4.53 கோடி வழங்கியுள்ளது.

**5.3. விடுபட்டோருக்கான எழுத்தறிவுத் திட்டம்**

இத்திட்டம், மாநில அளவில் பெண்களின் எழுத்தறிவு விகிதம் மாநில சராசரிக்குக் கீழாக உள்ள மாவட்டங்களில் எழுத்தறிவு விகிதத்தை அதிகரிப்பதற்காக மத்திய மாநில அரசுகளின் சீரிய முயற்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் 17 மாவட்டங்களில் மத்திய மாநில

அரசால் 2 : 1 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்பட்டு வரும் நிதயுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 790803 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**5.4. தேசிய திறந்தவெளி பள்ளித்திட்டம்**

புதிதாக எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டவர்கள், மேலும் கல்வியைத் தொடரவும், மற்றும் கற்க ஆர்வம் உடைய பிறருக்கு தொடர்ந்து கற்கும் வாய்ப்பு அளிக்கும் வகையிலும், புதுதில்லி தேசிய திறந்தவெளிப் பள்ளியுடன் இணைந்து பள்ளிக் கல்விக்கு இணையாக நிலை-1 (மூன்றாம் வகுப்பு) நிலை - 2 (ஐந்தாம் வகுப்பு) நிலை-3 (எட்டாம் வகுப்பு) பெற வளர்கல்வி மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5875 புதிதாகக் கற்போர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**5.5. பெண்களுக்கான 100 நாள் எழுத்தறிவுத் திட்டம்**

எழுத்தறிவு பெற்ற ஆண் பெண் பாலினத்தவர்களுக்கிடையேயான விகிதாச்சாரத்தில் பாலின இடைவெளியைக் குறைக்கும் வகையில் பெண்களுக்கென சிறப்பு 100 நாள் எழுத்தறிவிக்கும் திட்டம் மாவட்டந்தோறும் உள்ள ஒன்றியங்களில் முன்மாதிரியாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம் முன்மாதிரித் திட்டத்தில் செயல்வழிக் கற்பித்தல் (ABL) முறை வயதுவந்தோர் கல்விக்காக ஒரு சிறப்பு அணுகு முறையில் தயாரிக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

## 6. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுகள் துறை 1975 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வி இயக்குநரகத்திலிருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

**6.1. பொறுப்புகள்**

பள்ளி இறுதித் தேர்வுகளை நடத்துவதும், தேர்வு முடிவுகளை வெளியிடுவதுமே இத்துறையின் முதற்கடமையாகும். அரசுத் தேர்வுகள் துறை அந்தந்த பாடத்திட்டத்தின்படி மேல்நிலை/ இடைநிலை/ மெட்ரிகுலேசன்/ஆங்கிலோ இந்தியன் பொதுத் தேர்வுகள், ஆசிரியர் கல்வி பயிற்சிக்கான டிப்ளமோ தேர்வு, இசை, ஓவியம் மற்றும் தையற்கலை போன்ற பாடங்களில் தொழில்நுட்ப சான்றிதழ் தேர்வு, ஆக 33 வகையான தேர்வுகளை நடத்தி மதிப்பெண் சான்றிதழ்களை வழங்கி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலை/ இடைநிலை/ மெட்ரிக்/ ஆங்கிலோ இந்தியத் தேர்வுகள் மூன்று பருவங்களில் (மார்ச்/ஏப்ரல், ஜூன்/ஜூலை, மற்றும் செப்டம்பர்/அக்டோபர்) நடத்தப்படுகின்றன. ஏனைய தேர்வுகள் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

துறையால் வழங்கப்பட்ட பொதுத் தேர்வுகளுக்கான சான்றிதழ்களை தவறவிட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, உரிய கட்டணம் பெற்று அவர்களுக்கு சான்றிதழ்களின் இரண்டாம்படி/சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படும் மாணவர்கள் மற்றும் இத்துறையால் அளிக்கப்பெறும் சான்றிதழ்களின் அடிப்படையில் வேலை வாய்ப்பைப் பெறுபவர்கள் சமர்ப்பிக்கும்

சான்றிதழ்களின் மெய்த்தன்மையை இத்துறை சரிபார்த்து வழங்குகிறது. போலிச் சான்றிதழ் அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் 10/12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சியுற்று பிற மாநிலத்தில் மேல்படிப்பைத் தொடர விழையும் நபர்களுக்கு புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**6.2. தேர்வு முடிவுகளுக்கான நடவடிக்கை**

தேர்வு முடிவுகளுக்கான நடவடிக்கை அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இடைநிலை மற்றும் மேல்நிலைக்கான தேர்வுகளுக்கான முடிவுகளை கணினிமயமாக்குதலும் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட பணிகளும் இம்மையத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

1. மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மதிப்பெண் சான்றிதழ்களின் மெய்த் தன்மையை சரிபார்த்தல்.

2. மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மறு மதிப்பீடு / மறுகூட்டல் செய்யப்பட்டபின் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குதல்.

**6.3. மைய அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தின் தேர்வுகளை நடத்துவதில் உதவுதல்**

இந்திய அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகள் உட்படஅனைத்து மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணைய குழுமத்திற்கான தேர்வுகளை இத்துறை மிக்க கவனத்துடன் சென்னை மையத்தில் நடத்துகிறது. இந்த வகையினில் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிக்கான 14 தேர்வுகள் மற்றும் பணியாளர் தேர்வாணையத்தின் 12 தேர்வுகளும் இத்துறையால் நடத்தப்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளுக்கு இத்துறை ஒத்துழைப்பு நல்குகிறது.

**6.4. மதிப்பெண் சான்றிதழ்கள்**

மார்ச் 2000ம் ஆண்டிலிருந்து மேல்நிலை/இடைநிலை/ மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் இருமொழிகளில் அதாவது தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சடித்து தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

**6.5. தேர்வு முடிவுகள்**

மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான முடிவுகள் மதிப்பெண்களுடன் வெளியிடப்பட்ட நாளன்றே தனியார் வலைதளங்களிலும் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

**6.6. பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாட்களில் மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் விடைத்தாள்களின் அச்சுப் பகர்ப்பு நகல் பெறுதல்**

இவ்வசதி மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கும் அனைத்துத் மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ ஆங்கிலோ இந்தியன் தேர்வாளர்களுக்கும் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வுகளுக்கும், அனைத்து பாடங்களுக்கும் அளிக்கப்படுகிறது.

+2 தேர்வில் விடைத்தாள் திருத்துதலில் ஒளிவு மறைவற்ற தன்மையை கடைப்பிடிக்கும் வகையில் ஏழு பாடங்களுக்கு மட்டும் விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் வழங்கப்பட்டு வந்தது. மார்ச் 2009 முதல் அனைத்து பாடங்களுக்கும் விடைத்தாள்களின் அச்சுப்பகர்ப்பு நகல் மற்றும் மறுமதிப்பீடு செய்யும் முறை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**6.7. சிறப்பு துணை பொதுத் தேர்வுகள்**

மார்ச் மாதத்தில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வில் ஒன்று முதல் மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு அந்த முழுக் கல்வி ஆண்டை வீணாக்காமல் உடனடியாக தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்று உயர் கல்வி கற்பதற்கு வழி செய்யும் வகையில் ஜூன் மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.

**6.8. தேசிய அளவிலான திறனறித் தேர்வுகள்**

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமத்தின் சார்பில் தேசியத் திறனறித் தேர்வு இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. 9 ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 60%க்கு மேல் பெற்று பத்தாம் வகுப்பில் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் இத்தேர்வு எழுதத் தகுதியானவர்கள் என இருந்த திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் 7 ஆம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 60% ம் அதற்கு மேலும் பெற்று 8 ஆம் வகுப்பு பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் இத்தேர்வெழுத தகுதியானவர்கள் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட தேசிய அளவிலான தேர்விற்குப் பின் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி பட்டப்படிப்பு வரை மாதந்தோறும் ரூ.500/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி பட்டப் படிப்பிற்கு அதிகபட்சமாக நான்கு ஆண்டுகளுக்கு பல்கலை கழக மானியக் குழு, வீதப்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**2008-09 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய திட்டங்கள்**

**6.9. மாணவர்கள் சார்ந்த விவரங்களை விடைத்தாளில் பூர்த்திச் செய்ய மேலும் 5 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம்**

பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மார்ச் 2008 ஆம் ஆண்டிலிருந்து தேர்வு எழுதுவதற்கு முன்பாக தேர்வு எழுதுபவர்கள் மனதினை ஒருமைப்படுத்தி உளவியலாக தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் தேர்வு தொடக்க நிலையின் போது வினாத்தாளைப் படிப்பதற்கு 10 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம் அளிக்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளிலிருந்து நெடுந்தொலைவு பயணித்துத் தேர்வறையை அடையும் மாணவர்களுக்கு இது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

கவனத்தை ஒருமுகப்படுத்தும் நேரமாக அளிக்கப்பட்டுள்ள 10 நிமிடங்கள் தவிர விடைத்தாட்கள் வழங்கப்பட்டவுடன் விடைத்தாளின் முன்பக்கத்தில் மாணவர் சார்ந்த பதிவு எண் உள்ளிட்ட விவரங்களைப் பூர்த்தி செய்திட 10.15 வரை அதாவது **“விடைத்தாளில் விவரங்களை நிறைவு செய்தல் நேரமாக”** 5 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம் மார்ச் 2009 பொதுத் தேர்வு முதல் வழங்கப்படுகிறது.

6.10. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம் - 2008

மத்திய அரசு “தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம் (NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME) என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு 6,695 எண்ணிக்கையிலான மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை வழங்குவதாக அறிவித்தது. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் உள்ள மாணவர்களுக்கு தேர்வு நடத்தி மதிப்பெண் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் காலத்தில் மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.6000/- ஒவ்வொருவருக்கும் வழங்கப்படவுள்ளது. இவ்வுதவித் தொகை பெறுதலுக்காக 2007-2008 ஆம் கல்வியாண்டிற்கான மாணவ / மாணவியருக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கிட ஆகஸ்டு 2008-லும், 2008-2009 கல்வியாண்டிற்கு நவம்பர் 2008-லும் தேர்வு இவ்வியக்ககத்தினால் நடத்தப்பட்டுள்ளது.

6.11. வலைத்தளம்

இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் தொடர்பான கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம், சான்றிதழ் நகல் மற்றும் மதிப்பெண் பட்டியலின் சான்றொப்பமிடப்பட்ட நகலுக்கான (CCM) கட்டணம் போன்ற விவரங்களை வெளியிடுவதற்காக இத்துறைக்கெனத் தனிப்பட்ட வலைத்தளம் உள்ளது. வலைத்தள முகவரி www.tn.gov.in/dge. மாணவ சமுதாயத்தின் நலனுக்காக முந்தைய ஆண்டுகளின் மேல்நிலைக் கல்வி, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

அரசு பள்ளிகளுக்குத் தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் 1987-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆசிரியர் தேர்வு வாரியம் பள்ளிகளுக்கான ஆசிரியர்களை வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையிலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை நேர்காணல் நடத்தியும், பொறியியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை போட்டி எழுத்துத் தேர்வு நடத்துவதன் மூலமாகவும் வாரியம் தேர்வு செய்கிறது.

**7.1.** 2009-2010ம் ஆண்டிற்கான திட்டங்கள்

(i) தொடக்கக் கல்வித் துறைக்கு 5773 இடைநிலை ஆசிரியர்களை வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யவும், தொடக்கக் கல்வித் துறையில், 33 உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களை போட்டி எழுத்துத் தேர்வு மூலம் நிரப்பவும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 1195 விரிவுரையாளர்களைத் தேர்வு செய்ய வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iii) சட்டக் கல்லூரிகளில் 15 விரிவுரையாளர்கள் (முதுநிலை ஊதியம்) மற்றும் 7 விரிவுரையாளர்களை (சட்டம்) நியமனம் செய்திட ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நியமனத்திற்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**7.2. வலைத்தளம்**

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பல்வேறு நடவடிக்கைகளையும் பொதுமக்கள் அறிவதற்காக .ஆசிரியர் தேர்வு வாரியத்தின் http://trb.tn.nic.in என்ற வலைத்தளத்தில் காலிப் பணியிட விவரங்கள், தேர்வு கால அட்டவணைகள், அனைத்து தேர்வர்களின் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இறுதித் தேர்ச்சிப் பட்டியல் ஆகியவை வெளியிடப்படுகின்றன.

## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

தரமான பாடநூல்களை அச்சிட்டு, குறைந்த விலையில், குறித்த காலத்தில் மாணவ மாணவியருக்கு வழங்குவதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடநூல்கள் கிடைப்பதை உறுதிசெய்வதும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பள்ளிகளுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குவதும் பாடநூல் கழகத்தின் குறிக்கோள் ஆகும்.

**8.1. பாடப்புத்தகங்கள்**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் 502 தலைப்புகளில் 529 பாடநூல்களை (தொகுதி-I மற்றும் II உட்பட) அச்சிடுகிறது. பாடநூல்கள் மற்றும் தொழிற்கல்விக்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டய பயிற்சிக்கான வளநூல்கள், பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப் பட்டு வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

- மாநிலப் பாடத்திட்டத்தில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பாடநூல்கள்.
- மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தொழிற்கல்விப் பாடநூல்கள்
- மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்பு பாடநூல்கள்
- 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விப் பாடநூல்கள்
- அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பருவ பட்டயப் படிப்பிற்கான பாடநூல்கள்.
- சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாடநூல்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.
- ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள்

- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்.

- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான வினாவங்கி, மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள்.

**8.2. இலவசப் பாடநூல்கள்**

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், சுயநிதிப் பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்கீழ், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்ப்பாடநூல்கள் மட்டும் 2007-2008 -ஆம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

**8.3. பிற துறைகளுக்கான இலவசப் பாடநூல்கள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்கள் இக்கழக வட்டார அலுவலகங்களிலிருந்து அந்தந்தத் துறைகளுக்கு நேரிடையாக வழங்கப்படுகின்றன.

**8.4. பிறமாநிலங்களில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவசப் பாடநூல்கள்**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, அந்தமான் நிக்கோபார் நிர்வாகம் மற்றும் தமிழ் ஐக்கிய சங்கம், கொச்சின் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் பாடநூல்களை இலவசமாக வழங்கி வருகிறது.

**8.5. குறிப்பேடுகள்**

ஆதி திராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை, பிற்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கத் தேவைப்படும் குறிப்பேடுகளும், வெளிச்சந்தை விற்பனைக்காக குறிப்பேடுகளும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

**8.6. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச பாடநூல்**

2008-09ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை / புயலால் பெருவாரியான மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 1-12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**8.7. வலைத்தளம்**

இந்தியாவிலேயே 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களை வலைத்தளத்தில் வெளியிடும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது உட்பட 6 மொழிகளில் 529 பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. “இணையதளத்தில் பாடநூல்கள்” என்ற திட்டத்தின் கீழ் 348 பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான பாடநூல்கள்/ வளநூல்கள் மற்றும் 10ம் வகுப்பு மெட்ரிக்குலேசன் பள்ளி பாடநூல்கள், சேர்த்து மொத்தம் 21 பாடநூல்கள் 08-09-2008 அன்று வலைத்தளத்தில் www.textbooksonline.tn.nic.in வெளியிடப்பட்டது. மீதமுள்ள 160 பாடநூல்களையும் படிப்படியாக வலைத்தளத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 9. பொது நூலகங்கள்

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் இத்துறையின் தொலை நோக்காகும்.

### 9.1. குறிக்கோள்கள்

- நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக தெரியும்படி செய்தல்.
- நூலகங்களுக்கு போதிய உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- புத்தகங்களை போதிய அளவில் ஏற்படுத்துதல்.
- வளமான கட்டிடங்கள் மற்றும் போதிய நிதி வசதி திரட்டுதல்.

### 9.2. வழிமுறைகள்

- புதிய நூலகங்களைத் திறப்பதன் மூலம் அனைவருக்கும் நூலக வசதி ஏற்படுத்துதல்
- நூலகங்களை கணிணி மயமாக்குதல்
- நூலகங்களை டிஜிட்டல் மயமாக்குதல்
- இணைய தள வசதி ஏற்படுத்துதல்
- பொது மக்களிடையே நூலகம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- நூலகங்களுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுதல்
- குடிமைப்பணி கல்வி மையங்களை பெரிய நூலகங்களில் அமைத்தல்
- நூலக கட்டிடங்கள் கட்டுதல்
- மாவட்ட மைய நூலகங்களில் குழந்தைகள் பிரிவில் மல்டிமீடியா வசதி ஏற்படுத்துதல்
- நூலகங்களை அரசு சாரா அமைப்புகள் தத்தெடுத்தல்
- புத்தக வெளியீட்டு மற்றும் விற்பனை நிறுவனங்களோடு ஒருங்கிணைந்து புத்தகக் கண்காட்சி நடத்துதல்
- நூலக சீரமைப்பு மாநாடு நடத்துதல்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 ன்படி மாநிலத்தில் பொது நூலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 1972 ஆம் ஆண்டு பொது நூலகத் துறைக்கென தனியாக இயக்ககம்

ஏற்படுத்தப்பட்டது. தற்போது பல்வேறு நிலைகளில் தமிழகமெங்கும் 3924 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம்) | .. | 1 |
| 2. | மாவட்ட மைய நூலகங்கள் | .. | 30 |
| 3. | கிளை நூலகங்கள் | .. | 1567 |
| 4. | நடமாடும் நூலகங்கள் | .. | 12 |
| 5. | ஊர்ப்புற நூலகங்கள் | .. | 1827 |
| 6. | பகுதி நேர நூலகங்கள் | .. | 487 |
| | **மொத்தம்** | | 3924 |

### 9.3. கணினிமயமாக்குதல்

நூலகங்களின் செயல்பாட்டை உயர்த்தவும் வாசகர்களுக்கு சிறந்த நூலகச் சேவை அளிக்கவும் நூலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்காணும் நூலகங்களில் கணிப்பொறி, இன்டர்நெட் மற்றும் ஈமெயில் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. கன்னிமாரா பொது நூலகம், சென்னை.
2. 30 மாவட்ட மைய நூலகங்கள்
3. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 100 கிளை நூலகங்கள்.

மேலும் 2008-09 ஆம் ஆண்டில் 50 நூலகங்கள் கணினிமயமாக்கப்படுகின்றன.

### 9.4. நூலகங்களை டிஜிட்டல் மயமாக்குதல்

பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களை குறுந்தகட்டில் (சி.டி.) பாதுகாக்க கன்னிமாரா பொது நூலகத்தில் 5 ஸ்கேனர் நிறுவப்பட்டுள்ளது. அதில், நாளிதழ்கள் மற்றும் அரிய சேகரிப்புக்கள் குறுந்தகட்டில் பாதுகாக்கப்படுகின்றன. பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களை சி.டி.யில் பதிவு செய்து பாதுகாக்கும் பணி திருமலா திருப்பதி தேவஸ்தான நிறுவனத்தின் உதவியுடன் 9 ஸ்கேனர்கள் தனியாக நிறுவப்பட்டு நடைபெற்று வருகின்றது.

### 9.5. பொது நூலகத்துறையில் இணையதள வசதி உருவாக்குதல்

நூலகத்தின் நடவடிக்கைகள் பற்றிய பல்வேறு குறிப்புகளை, நூலகத்திற்கு வராமலேயே அவரவர் வீடு மற்றும் இருப்பிடத்தில் இருந்தபடியே அறிந்து கொள்ள இணையதள வசதி அவசியமாகிறது.

கன்னிமாரா பொது நூலகத்திற்கென www.connemarapubliclibrarychennai.com என்ற பெயரில் இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களுக்குத் தேவையான பயனுள்ள தகவல்கள் உள்ளன.

பொது நூலக இயக்ககம் மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களுக்கும் இணையதள வசதியினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 9.6. நூலக மென்பொருள் ஏற்படுத்துதல்

பொது நூலகத் துறையின் கீழ் 30 மாவட்ட மைய நூலகங்கள் 1567 கிளை நூலகங்கள் 1827 ஊர்ப்புற நூலகங்கள் செயல்படுகின்றன. நூலகத்திற்கு வரும் வாசகர்களுக்கு மேலே

குறிப்பிட்ட வகையில் நூல் இரவல் வழங்குதல் மற்றும் நூல் திரும்ப பெறுதல் ஆகிய இப்பணிகளை கணிப்பொறி மூலம் செய்வதால், பணிகளை வேகமாகவும், செம்மையாகவும் செயல்படுத்த, இயலும். எனவே நூலக மென் பொருள் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. பொது நுலகங்களுக்கு தேவையான மென்பொருள் விரைவில் உருவாக்கப்படும்.

**9.7.செய்திமடல்**

பொது நூலகத் துறை சார்பாக **"**பொது நூலகச் செய்திமடல்**"** என்ற காலாண்டு இதழ் 1996 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் நூலக இயக்கம் தொடர்பான செய்திகள் இடம் பெற்று வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை 50 இதழ்கள் வெளிவந்துள்ளன.

**9.8. வாசகர் வட்டம்**

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கொண்ட **"**வாசகர் வட்டம்**"** என்ற அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் திறனாய்வு, இலக்கியச் சொற்பொழிவு உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**9.9. இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்**

கல்கத்தாவில் உள்ள இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மத்திய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசின் பொதுநூலகத்துறை இந்த அறக்கட்டளையில் இருந்து ஆண்டுதோறும் அதிகபட்சமாக ரூ.200/- இலட்சம் இணை மானியம் பெற்று சிறப்பான நூலகச் சேவை ஆற்றி வருகிறது. இவ்வாறு பெறப்படும் நிதியுதவி, நூல்கள், கணிப்பொறி, நூல் அடுக்குகள் வாங்குதல், பயிற்சி மற்றும் நூலக கட்டிடங்கள் கட்டுதல் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**9.10. நூல்கள் வாங்குதல்**

நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் செய்திகளை அறியவும் பொது மக்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடவும், ஆண்டுதோறும் பயன்படும் விலையுயர்ந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் சுமார் 10/- கோடிக்கு நூலகங்களுக்கு வாங்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழ் நூல்கள் அதிகபட்சம் 750 படிகள் வாங்கப்பட்டு வந்தன. 2008-09 ஆம் ஆண்டிலிருந்து இது 1000 படிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் வாங்கப்பட்ட நூல்கள் விவரம் வருமாறு:

| வ.எண். | ஆண்டு | தொகை (இலட்சத்தில்) | தலைப்புகள் |
|---|---|---|---|
| 1. | 2006-2007 | 171.00 | 419 |
| 2. | 2007-2008 | 1792.00 | 7214 |

9.11. குடிமைப்பணி கல்வி மையங்கள்

வங்கிப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே பணியாளர் தேர்வாணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பயன்பெறும் வகையில் "குடிமைப்பணி கல்வி மையங்கள்" என்ற பிரிவு மாவட்ட மைய நூலகங்களிலும் தாலுகா தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 150 நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேலும் 50 நூலகங்களில் கூடுதலாக குடிமைப்பணி கல்வி மையம் ஏற்படுத்தப்படுகிறது.

9.12. நூலகக் கட்டிடம் கட்டுதல்

மொத்தமுள்ள 3924 நூலகங்களில் 1611 நூலகங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. 2010 நூலகங்கள் வாடகையில்லா கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 303 நூலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர் நிதி, பாராளுமன்ற உறுப்பினர் நிதி அல்லது மாவட்ட வளர்ச்சி நிதியின் மூலமாக நூலகங்களுக்குஏற்கனவே காலிமனை பெறப்பட்ட இடங்களில் தற்போது கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு 47 நூலகங்கள் ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர 62 நூலகங்களுக்கு ரூ.2/- கோடி மதிப்பில் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெறுகிறது.

9.13. குழந்தைகள் நூலக பிரிவில் மல்டி மீடியா

குழந்தைப்பருவத்திலிருந்தே பாடப் புத்தகங்கள் மட்டுமல்லாது பிற புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தையும் நூலகத்திற்கு வரும் ஆர்வத்தையும் குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இந்தப் பழக்கத்தை ஏற்படுத்த நூலகத்தில் உள்ள குழந்தைகள் பிரிவில் மல்டிமீடியா கணினி பிரிவு (Multi-Media-Computer-Section) அமைப்பது அவசியமாகிறது.

30 மாவட்ட மைய நூலகங்களில் முதற்கட்டமாக 10 மாவட்ட மைய நூலகங்களில் ரூ.2/- இலட்சம் மதிப்பில் கணிப்பொறி விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

9.14. புத்தகப் பூங்கா

பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை கன்னிமாரா பொது நூலகத்தில் முதல் நிரந்தர புத்தகப் பூங்கா அமைக்கப்பட்டு கண்காட்சி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதர மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்ட மைய நூலகங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நடைபெறும் தேசிய நூலக வார விழாவின் போது புத்தக விற்பனையாளர்கள்/பதிப்பாளர்கள் உதவியுடன் புத்தகப் பூங்கா அமைக்கப்படுகிறது. இத்தகைய புத்தகப் பூங்கா பொது மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதால் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்துடன் (பபாசி) இணைந்து மாவட்ட

அளவில் புத்தகக் கண்காட்சி நடத்த உத்தேசிக்கப்பட்டு, அதன்படி சென்னை, கோயமுத்தூர், மதுரை முதலிய இடங்களில் புத்தகப் பூங்காஅமைக்கப்படுகிறது.

**9.15. மறைமலையடிகள் நூல் நிலையம்**

மறைமலையடிகள் நூல் நிலையம் அரசு நிதி உதவியுடன் செயல்படும் பழைமைவாய்ந்த நூல் நிலையமாகும். இந்நூல் நிலையம் சென்னை லிங்கிச் செட்டி தெருவில் இட வசதியின்றியும் மிகவும் பழுதடைந்த கட்டடத்திலும் செயல்பட்டு வந்தது. தமிழன்பர்களின் வேண்டுகோளினை ஏற்று இந்நூலகத்திற்கு கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யபட்டு மாற்றம் செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**9.16. அண்ணா நூற்றாண்டு நூலகம்**

புதிய அறிவியல் நூல்கள், புதிய வெளியீடுகள், வரலாற்றுப் படைப்புகள் மற்றும் மேற்கோள் நூல்கள் உட்பட்டவை இன்னமும் ஏழை எளிய மாணவர்களுக்கும், சாதாரண பொது மக்களுக்கும் கிடைத்தற்கரியனவாக உள்ளன. ஆகவே, இவற்றை எளிதில் பெறுவதை உறுதி செய்ய வேண்டி, சர்வதேசத் தரத்திலான 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' ஒன்றைச் சென்னையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இந்நூலகம், நவீன உட்கட்டமைப்பு வசதியுடன் அனைத்து நூல்கள் மற்றும் இணைய அடிப்படையிலான வெளியீடுகளுடன் கூடிய ஒரு மிகப்பெரிய மாதிரி நூலகமாக அமையவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவினம் ரூ.165 கோடி ஆகும். இதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

**9.17.பதிப்பாளர் நலவாரியம் அமைத்தல்**

புத்தக பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனி நல வாரியம் அமைக்கப்படுகிறது. இதன்பொருட்டு 2008-09 ஆம் ஆண்டில் ரூ.50/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நலவாரியம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

**9.18. நூலக சீரமைப்பு மாநாடு**

நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நூலகத் தேவைகளை நன்கொடைகள் மூலம் பெற நடத்தப்படுகின்றன. பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. இவ்வாறு பொது மக்களிடமிருந்து காலிமனை, கட்டடங்கள், தளவாடங்கள், கணிப்பொறி முதலியன நன்கொடையாக ஏற்கப்படுகின்றன. மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை இணைத்து இத்தகைய வளர்ச்சி மாநாடுகள் நடத்தப்படுகின்றன. முதல் வளர்ச்சி மாநாடு கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களை இணைத்து கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. அடுத்து தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களை இணைத்து இரண்டாவது மாநாடு தேனியிலும் திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களையும் இணைத்து மூன்றாவது மாநாடு திருச்சியிலும், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களை இணைத்து 4வது மாநாடு விருதுநகரிலும், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை இணைத்து 5வது மாநாடு திருவண்ணாமலையிலும் நடத்தப்பெற்றது.

**கன்னிமாரா பொது நூலகம்**

கன்னிமாரா பொது நூலகத்தின் நோக்கம் தற்போது தனிப்பட்ட நபர்களிடம் உள்ள அரிய பழமையான நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை குறுந்தகடுகளில் பதிவு செய்து நூலகத்தில் பாதுகாப்பது, சரியான தகவலைச் சரியான நேரத்தில் சரியான வாசகர்களுக்கு வழங்குவது மற்றும் நூலகப் பணியாளர்களின் நூலகப் பணித் திறனை மேம்படுத்த தகவல் தொழில் நுட்பவியலில் உரிய பயிற்சி வழங்குவதுமாகும்.

கன்னிமாரா பொது நூலகம் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இன்படி மாநில மைய நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோகச் (பொது நூலகங்கள்) சட்டம், 1954- இன்படி தேசிய வைப்பு நூலகமாகவும் (National Repository) செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் அனைத்து நூல்கள், செய்தித் தாள்கள் மற்றும் பருவ இதழ்களை அவற்றின் பதிப்பாளர்களிடமிருந்து இலவசமாக பெறக்கூடிய தகுதியை இந்நூலகம் பெற்றுள்ளது. மேலும், இந்நூலகம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய நிறுவனங்களின் வெளியீடுகளைக் கொண்ட தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகத்தில் 6.85 இலட்சம் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்நூலகப் பணிகள் முழுமையும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்குச் சுமார் 1500 வாசகர்கள் இந்நூலகத்திற்கு வருகை புரிகின்றனர். மற்றும் இந்நூலகத்தில் 119095 நபர்கள் உறுப்பினராக உள்ளனர்.

- நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்களை குறுந்தகட்டில் பதிவு செய்து பாதுகாக்கத் தேவையான Book Scanner மற்றும் Paper Scanner வசதிகளை இந்நூலகம் கொண்டுள்ளது. .
- இணைய தளத்தின் வழியாக பழைய மற்றும் அரிய நூல்களைப் படிக்கவும், படி எடுக்கவும் 10 கணிப்பொறியுடன் கூடிய மின்னணு நூலகப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.
- இணைய தளத்தின் மூலம் பள்ளி மாணவ மாணவியர்கள் தங்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகளைப் பெறவும், பாடம் தொடர்பான குறுந்தகடுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வசதியாக 10 கணிப்பொறிகளுடன் கூடிய பன்முக ஊடகப்பிரிவு (Multimedia Section) செயல்பட்டு வருகிறது.
- கல்லூரி மாணவ மாணவியர் பயனுக்காக தேவையான நூல்களைக் கொண்ட பாடநூல் பிரிவும், குடிமைப்பணி மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுவோர் பயனுக்காக போதிய அளவு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் கொண்ட குடிமைப்பணி கல்வி மையமும் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிற்து.
- அனைத்துப் பதிப்பாளர்களின் தமிழ் நூல்களை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யும் வகையில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்க ஆதரவில் கன்னிமாரா நூலக வளாகத்தில் நிரந்தரப் புத்தகப் பூங்கா செயல்பட்டு வருகிறது.

**தங்கம் தென்னரசு**
*பள்ளிக்கல்வி அமைச்சர்*